**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.6 |
| Name | : | சூர்யா |
| Father's / Husband Name | : | பெருமாள் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 24/2025 |

**தேதி : 18.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊர்தான். எனக்கு தனியார் வங்கியில் லோன் வாங்கி கொடுத்த வகையில் எதிரி எனக்கு பழக்கம். எதிரி தன்னுடைய குடும்ப கடனை அடைப்பதற்காக என்னிடம் லோன் வாங்கி கொடுக்க வேண்டும் என்று அந்த லோனை அவரே அடைத்துவிடுவதாக சொன்னார். அதனால் நான் துறையூரில் உள்ள முத்தூட் பைனான்ஸ் என்ற நிதி நிறுவனத்தில் கடந்த 16.05.2023ம் தேதி ரூ. 50,000/- லோன் போட்டு பிடித்தம் போக மீதி தொகை ரூ. 48,100/-ஐ எதிரியின் G pay கணக்கிற்கு அனுப்பினேன். லோனுக்கான தவணை தொகையை 1வருடம் எதிரி கட்டினார். அதன் பிறகு கட்டாததால் நிதி நிறுவனத்திலிருந்து ஆட்கள் வந்து என்னிடம் பணத்தை கட்ட சொன்னார்கள்.

அதன்பிறகு எதிரிக்குபோன் செய்து பார்த்தேன், போனை எடுக்கவில்லை. எங்கு போனார் என்று தெரியவில்லை. ஊரில் நிறைய பேரிடம் லோன் வாங்கி

கட்டாமல் ஏமாற்றியதாக கேள்விபட்டேன். சங்கீதா, மணிமேகலை, காயத்திரி, சூரியா, சித்ரா, கலைசெல்வி, தனலெட்சுமி மற்றும் சுமார் மொத்தமாக 40 பேரை ஏமாற்றியதாக கேள்விபட்டேன். அதன்பிறகு புகார் கொடுக்க பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனைவரும் புகார் கொடுக்க சென்றோம். சத்தியா என்பவர் 27.07.2024 அன்று புகார் கொடுத்தார். குற்ற பிரிவு போலீஸார் என்னை விசாரித்தார்கள். **Union Bank of India செட்டிக்குளம் கிளையின் 16.05.2023 – 17.05.2023 தேதியிட்ட என்னுடைய வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

எதிரி என்னுடைய பக்கத்து தெருவை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி எனக்கு 2 ஆண்டுகளாக தெரியும். எதிரி இதற்கு முன்பு எனக்கு லோன் வாங்கி கொடுத்துள்ளார். நான் மகளிர் சுய உதவி குழுவில் இல்லை. முத்தூட் பைனான்ஸ் நிறுவனத்தில் லோன் வாங்கி கொடுத்த வகையில் எனக்கு எதிரயை தெரியும். குடும்ப செலவிற்காக லோன் வாங்கி கொடுக்க சொன்னார். மொத்தம் 24 தவணைகளில் 12 தவணைகளை எதிரி கட்டிவிட்டார். லோனை வாங்கும்போது அந்த லோன் தொகையை நான்தான் கட்ட வேண்டுமென்று எனக்கு தெரியும். எதிரி மீதி உள்ள தவணை தொகையை என்னிடம் கொடுத்தால் வாங்கிகொள்ள தயாராகவுள்ளேன். எதிரி என்னை திட்டமிட்டு ஏமாற்றவில்லை என்றாலும், எதிரியின் குடும்ப சூழ்நிலை காரணமாக அவரால் பணத்தை கட்ட முடியவில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.